**10.1.2026**

பெயர் - கணேசன்

(துவங்கப்படும் நேரம் - 12.30 PM)

(முடிக்கப்பட்ட நேரம் - 1.00 PM)

**O.S. No.113/2023 (D.W -1 )**

குறுக்கு விசாரணை :-

1 மற்றும் 2 வது வாதியான பாலசுப்பிரமணியன் மற்றும் சிவராமன் ஆகியோர்கள் எனது சகோதரர்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். என் தந்தைக்கு 2 மனைவிகள் என்று சொன்னால் சரிதான். முதல் மனைவியின் குழந்தைகளின் பெயர் என்ன என்றால் கிருஸ்ணமூர்த்தி ஆவார். 2 வது மனைவிக்கு பிறந்த குழந்தைகள் யார் என்றால் பாலசுப்ரமணியன், சிவராமன், நான் மற்றும் விஜயலட்சுமி ஆவோம். என் தந்தை உயிருடன் இருந்த போதே எங்கள் 5 நபர்களுக்கும் தனிதனியான உயில் மூலம் சொத்துக்களை பிரித்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா உயில் எழுதியதே எனக்கு தெரியாது. என் அப்பா உயில் எழுதிய விவரம் எனக்கு தெரியாது என்று எனது எதிர்வழக்குறையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ-1 முதல் 3 வரையிலான உயில்கள் எனக்கும் 1 மற்றும் 2 ம் வாதிக்கும் என் தந்தை தனி தனியாக சொத்துக்களை எழுதி கொடுத்த உயில்கள் என்று சொன்னால் சரியல்ல. இதுவரை அவ்வாறான உயிலை நான் பார்த்ததில்லை. என் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 1995 ம் வருடம் ஆகும். என் தந்தை இறப்பிற்கு பின் நாங்கள் 5 நபர்களும் தனிதனியாக சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.361/1 உதகை ரூரல் ல் உள்ள 1 ஏக்கர் டீ எஸ்டேட் எனது சுவாதினத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால்சரியல்ல. கடநாடு கிராமத்தில் உள்ள சர்வே எண்.271/2 என்ற இடத்தில் 20 சென்ட் பூமி எனது அனுபோகத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதை என் தந்தை

உயிருடன் இருக்கும் போதே கொடுத்துவிட்டார். அதே கடநாடு கடநாடு கிராமத்தில் உள்ள சர்வே எண்.267 ல் உள்ள 3 செண்ட் பூமியை நான் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். பாலசுப்ரமணியன், சிவராமன், கிருஸணமூர்த்தி மற்றும் விஜயலட்சுமி ஆகியோர்கள் என் அப்பாவின் பூமியை தனிதனியாக அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் கிருஸ்ணமூர்த்திக்கு பூமி ஏதும் கொடுக்கப்படவில்லை. மற்ற 3 வரும் அனுபவித்து வருகிறார்கள். கிருஸ்ணமூர்த்திக்கு கடநாடு கிராமத்தில் ஒரு மாவு மில் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை. என் அப்பாவின் பூமி பிரிக்கப்பட்டதா இல்லையா என்றால் பிரிக்கப்படவில்லை. உயில் படி என் தந்தை உயிருடன் இருக்கும் போதே எங்களுக்கு பூமியை கொடுத்துவிட்டார் என்றும் அதனால் தான் என் தந்தை இறந்த பின் 30 வருடம் ஆன பின்பும் பூமியை பிரிக்காமல் இருந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் பாகம் கேட்டும் அவர்கள் தராததால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்து 20 வருடங்களாக நடந்து வருகிறேன். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குறையில் நான் பாகப்பிரிவினை கோரினேன் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை இறப்பிற்கு பின்னர் உயிலின் படி எனக்கு ஒதுக்கப்பட்ட பூமியை நான் அனுபவித்து வருவதால் நான் பாகப்பிரிவினை ஏதும் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 ம் வாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டின் சுவாதினத்தில் என் தந்தை உயிருடன் இருந்த காலம் முதல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். என் அப்பாவின் கட்டாயத்தின் பேரில் தான் நான் பூர்வீக வீட்டில் இருந்து இந்த வீட்டிற்கு சென்றேன். 1 மற்றும் 2 ம் வாதிகள் வெளி ஊரில் வேலை செய்து வந்தார்கள் என்றும் நான் மட்டுமே எங்கள் ஊரில் வசித்துவந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் பூர்வீக வீட்டில் இருக்கும் போது என் அப்பாவையும் அம்மாவையும் சரிவர கவனிக்காததால் தான் என்னை அந்த வீட்டிற்கு அனுப்பிவைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் பிறந்ததில் இருந்து 1990 வரை நான் தான் என் பெற்றோரை கவனித்து வந்தேன். கடைசி 4 வருடகாலமாக தான் உதகையில் 1

மற்றும் 2ம் வாதிகளுடன் என் பெற்றோர்கள் வசித்தார்கள். 1990 ல் இருந்து என் பெற்றோரை நான் சரிவர கவனிக்காததால் தான் அவர்கள் உதகையில் உள்ள 1 மற்றும் 2ம் வாதிகள் வீட்டிற்கு சென்று வசித்தார்கள் என்றும் அவர்கள் வீட்டில் தான் என் பெற்றோர்கள் இறந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. உதகையில் உள்ள 1ம் வாதி வீட்டில் என் தந்தையும், சென்னையில் உள்ள 2ம் வாதி வீட்டில் என் தாயும் வாழ்ந்து வந்தார்கள். வாதிகளின் தேவைக்காகத்தான் என் பெற்றோர் அவர்களுடம் வசித்தார்கள். உயில் மூலம் எனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டிற்கு எதிராக வழக்கு நிலுவையில் உள்ளதால் அந்த பிரச்சனை முடித்துகொடுத்தால் தான் 1 மற்றும் 2ம் வாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட தாவா சொத்தில் இருந்து நான் காலி செய்வேன் என்று கூறி தாவா சொத்தில் வசித்துவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கானது 2018ம் வருடம் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பான போதும் நான் மேலும் 4 வருட காலத்திற்கு பின்னர் தான் வீட்டினை காலி செய்து கொடுப்பேன் என்று கூறி தாவா சொத்தில் வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த 4 வருடம் முடிந்த பின்னர் 1 மற்றும் 2ம் வாதிகள் நான் காலி செய்ய மறுத்தால் காவல்நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றும் நான் காவல் நிலையத்தில் வீட்டினை காலி செய்வதாக எழுதிகொடுத்தேன் என்று சொன்னால் காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி என்னை வெளியே செல்லவிடாமல் தடுத்ததால் அவர்கள் கூறியது படி நான் எழுதி கொடுத்துவிட்டு வந்தேன். அதன்பின்னர் நான் காவல் கண்காணிப்பாளரிடம் அது குறித்து புகார் அளித்தேன். அந்த புகாரின் பேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும் படி கூறிவிட்டார்கள். நான் என்னை கட்டாயப்படுத்தியதாக காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தாக கூறியுள்ள நிலையில் அந்த புகாரினை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் காவல் நிலையத்தில் காலிசெய்வதாக எழுதி கொடுத்துவிட்டு காலிசெய்ய மறுத்ததால் வாதிகள் தான் காவல் கண்காணிப்பளரிடம் புகார் அளித்தார்கள் என்றும் பின்னர் நான் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக கூறிவிட்டு

வந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. உதகை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல்தாவா எண்.61/2022 என்ற எண்ணில் வாதிகள் எனக்கு எதிராக ஒரு வழக்கினை தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அந்த வழக்கின் தீர்ப்பில் அந்த வழக்கில் சில பிழைகள் இருந்ததால் அதை திரும்ப பெற மனுதாக்கல் செய்யப்பட்டு வேறு வழக்கு தாக்கல்செய்ய அனுமதி வழங்கி அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது வேறு சங்கதிகள் எனக்கு புரியவில்லை. உயில் படி எங்கள் 5 நபர்களுக்கும் சொத்தினை பிரித்துகொடுத்த பின்பும் நான் வேண்டுமென்றே தாவா சொத்தினை வாதிகளுக்கு காலி செய்து கொடுக்காமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உயிலை ஏற்கவில்லை என்று எனது எதிர்வழக்குறையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் எனது வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன். நான் சட்டவிரோதமாக தாவா சொத்தில் குடியிருந்து வருவதால் நான் அதை காலி செய்ய கடமைபட்டவன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தால் மட்டும் தான் நான் அதை காலி செய்ய கடமைபட்டவன் ஆவேன்.

G.Bharathi Prabha

Digitally signed by G.Bharathi Prabha
Date: 2026.01.10 13:19:41 +0530